**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 303/2023**
**வழக்கு சாட்சி PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெயக்குமார் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of May 22nd, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் கருவந்தாவில் குடியிருந்து வருகிறேன். நான் சோப் வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எனது சித்தி தங்கபுஸ்பத்திற்கு சொந்தமாக கருவருந்தாவில் உள்ள இடத்தில் எனது சித்தி கேட் போட்டார். எதிரிகள் கேட் போடக்கூடாது என்று பிரச்சனை செய்தார்கள். அதில் எனது சித்திக்கும், எதிரிகளுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. இந்த பிரச்சனை சம்பவம் நடப்பதற்கும் 2 நாட்களுக்கு முன்பு நடந்தது. 06.07.2021ம் தேதி, மாலை 04.00 மணி அளவில் எனது சித்தி வீட்டிற்கும், தென்னந்தோப்பிற்குமிடையே உள்ள ரோட்டில் நானும், சாட்சி திலீப், அனிதா, ராஜேஷ் மற்றும் எனது சித்தி தங்கபுஷ்பம் ஆகியோர் நின்றுகொண்டிருந்தோம். அப்போது, எதிரிகள் அங்கு வந்து எங்களை கெட்ட வார்த்தையால் பேசினார்கள். அதற்கு நான் கெட்ட வார்த்தையால் பேசாதீர்கள் என்று சொன்னதற்கு நாங்கள் அவ்வாறு தான் பேசுவோம் என்று சொல்லி, "உனக்கு எல்லாம் என்ன மரியாதை, சிறுக்கி மவனே,

உன்னை உண்டு, இல்லை என்று செய்து விடுவோம்" என்று கூறி எதிரி அருள்முருகன் அரிவாளால் எனது தலையை நோக்கி வெட்டினார். நான் அதை இடது கையால் தடுத்ததில், எனக்கு இடது கையில் வெட்டுப்பட்டு, காயம் ஏற்பட்டது. (சாட்சி வெட்டுக்காயத்தை காண்பித்து சாட்சியம் அளித்தார்). இதைப் பார்த்த எனது தம்பி திலீப் "அண்ணனை ஏன் வெட்டினாய்" என்று கேட்டபோது, அவனையும் எதிரி அருள்முருகன் அரிவாளால் இடது முன்கையில் வெட்டி காயப்படுத்தினார். அந்த இடத்தில் ஆட்கள் கூடினார்கள். ஊத்துமலை அரசு மருத்துவமனையில் முதலுதவி செய்து விட்டு, அங்கிருந்து தென்காசி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். சிகிச்சையில் இருந்தபோது, போலீசார் வந்து விசாரிக்க நடவடிக்கை எடுப்பதற்கு புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1. என்னிடம் காட்டப்படும் அரிவாள் என்னை எதிரி வெட்டப் பயன்படுத்தியது. அது சா.பொ.1. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

இல்லை.

C KATHIRAVAN Digitally signed by C KATHIRAVAN Date: 2025.05.26 12:51:06 +0530